தினமணி (06.09.2019)

# காகிதபுரம் டிஎன்பிஎல் ஆலை சார்பில் ரூ.7.40 லட்சத்தில் நல உதவிகள்




கிறிஸ்தவ பாதிரியாரிடம் ரூ.1 லட்சத்திற்கான காசோலையை வழங்குகிறார்கள் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்)கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் (மனித வளம்) பட்டாபிராமன் ஆகியோர்.

கரூர், செப். 5: காகிதபுரம் டிஎன்பிஎல் ஆலை சார்பில் ரூ.7.40 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் ஒரு நபருக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.10,000-ம், கிறிஸ்துவ தேவாலயம் மற்றும் 5 கோயில்களுக்கு கும்பாபிஷேகம், கட்டுமானப் பணி மற்றும் புனரமைப்பு நிதியாக ரூ.1.80 லட்சம், விளையாட்டுப் போட்டி நடத்துவதற்காக ரூ. 50,000 , எரிவாயு தகன மேடை பழுதுபார்க்கும் செலவிற்காக ரூ.5 லட்சம் என மொத்தம் ரூ.7.40 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஆலை வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

விழாவில் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்)கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் (மனித வளம்) பட்டாபிராமன் ஆகியோர் பங்கேற்று பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.